பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 06 2026** **06 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

2. மருந்து உற்பத்தித் துறையில் முன்னணி நாடாக இந்தியா வளர்ந்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு, பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் மாநகராட்சிப் பகுதிகளில் 24 மணி நேரமும் தடையற்ற குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் அரசுப் பேருந்துகளின் சேவை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் உத்தரவிட்டுள்ளார்.

5. உலக யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியா 114 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலக்கரி உற்பத்தி ஆண்டுக்கு ஒரு பில்லியன் டன்னை எட்டியுள்ளதாக தெரிவித்தார்.

உலகின் இரண்டாவது பெரிய நிலக்கரி உற்பத்தி நாடாக இந்தியா மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது 5 லட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 25 லட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் இத்துறை வழங்கி வருவதாக அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் நிலக்கரி இறக்குமதி குறைந்துள்ளதாகவும், இதனால் 60 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலக்கரித் துறையில் தொடர்ந்து சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

தற்போது போதுமான அளவு நிலக்கரி கையிருப்பில் உள்ளதாகவும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<>>>>

மருந்து உற்பத்தித் துறையில் முன்னணி நாடாக இந்தியா வளர்ந்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மருந்து உற்பத்தியாளர்கள் மாநாட்டில் பேசிய அவர், இத்துறையின் உற்பத்தி தற்போது 60 பில்லியன் டாலராக உள்ளது என்றும், அடுத்த 5 ஆண்டுகளில் இது இரு மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

உயர்ந்த தரத்திலான மருந்துகளை இந்தியா தொடர்ந்து உற்பத்தி செய்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 12 ஆண்டுகளில் இத்துறை பெரிய வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியா மேற்கொள்ளும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம் உலகளாவிய சந்தைகளில் இந்திய மருந்துகள் முக்கிய இடம் பிடிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கோவிட் பெருந்தொற்றின்போது பல்வேறு நாடுகளுக்கு இந்தியா தடுப்பூசி வழங்கியதை அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் மருந்து உற்பத்தி துறையில் உள்ள வாய்ப்புகளை சர்வதேச மருந்து நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு. பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் மாநகராட்சிப் பகுதிகளில் 24 மணி நேரமும் தடையற்ற குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து திட்டங்களும் குறித்த காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறினார்.

மாநிலத்தில் உள்ள 25 மாநகராட்சிகளிலும் தடையற்ற குடிநீர் வினியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

146 நகராட்சிகள் மற்றும் 479 பேரூராட்சிகளிலும் குடிநீர் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கூறினார்.

ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில் பல்லுயிர் மற்றும் சூழலியல் பூங்காக்களை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு திரு. விஜய் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசுப் பேருந்துகளின் சேவை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், பேருந்துகளை குறித்த நேரத்தில் இயக்குதல், தூய்மையாக பராமரித்தல், பயணிகளிடம் கனிவாக நடந்துகொள்ளுதல், மாணவர்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவற்றை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பண்டிகை நாட்கள் மற்றும் வார விடுமுறை நாட்களில் பேருந்துகளின் சீரான இயக்கத்தை உறுதி செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார்.

போக்குவரத்து ஊழியர்களின் நலன், பணிப் பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தினார்.

1 4 9 என்ற போக்குவரத்து துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் பயணிகளிடம் இருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு திரு. விஜய் தமிழன் பார்த்திபன் உத்தரவிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் எபோலா வைரஸ் தடுப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte — Arunraj — 21 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற அக்கட்சியின் இளையோர் மற்றும் நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்திற்குப் பின் சமூக வலைதளத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இளையோருக்கு முன்னுரிமை அளிப்பதில் பிஜேபி உறுதியாக உள்ளது என்றும், அவர்களுக்கு உரிய வாய்ப்புகளும், பிரதிநிதித்துவமும் வழங்கப்படும் எனவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்துக் காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி, கோவை, திருநெல்வேலி உள்ளிட்ட 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35ஆக அதிகரித்துள்ளது.

--------------

சீன அதிபர் திரு. ஸீ ஜின் பிங் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக வடகொரியா சென்றுள்ளார்.

--------------

அர்மேனியா நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. Nikol Pashinyan-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

நில எல்லைப் பகுதிகளில் அண்டை நாடுகளுடனான சரக்குப் போக்குவரத்து மேலாண்மை தொடர்பான சிறப்பு தளத்தை தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

--------------

கர்ப்பிணிப் பெண்களுக்கான நலத்திட்டத்தின் 10 ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களை புதுதில்லியில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா இன்று தொடங்கி வைத்து சிறப்பு அஞ்சல்தலை மற்றும் நாணயத்தை வெளியிட உள்ளார்.

--------------

தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்புக்கான சிங்கப் பெண் அதிரடிப்படையின் தொடக்க விழா இன்று சென்னையில் நடைபெறும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

--------------

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து இன்று முதல் 36 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படும் என நீர்வளத்துறை கூறியுள்ளது.

--------------

திண்டுக்கல்லில் அரசுத் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாநில அமைச்சர் திரு. விக்னேஷ் தலைமையில் நடைபெற்றது.

--------------

தென்காசி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ஆய்வு செய்தார்.

--------------

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில், பக்தர்களுக்கான வசதிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

--------------

திருப்பத்தூரில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்துதல் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. ரவிகுமார் தலைமையில் நடைபெற்றது.

--------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. வீரப்பன் வழங்கினார்.

--------------

காஞ்சிபுரத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

சென்னை மெரினா கடற்கரையில் தேவையான மின் விளக்குகள் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் ஆய்வு மேற்கொண்டார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

**உலக யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியா 114 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.**

**அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டி நேற்று நிறைவடைந்தது. இதில் இந்தியா 102 தங்கம், 9 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.**

**மூன்று தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஜப்பான் இரண்டாவது இடத்தையும், 2 தங்கம், 3 வெள்ளிப் பதக்கங்களுடன் அர்ஜென்டினா மூன்றாவது இடத்தையும் பிடித்தன.**

--------------

**அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டி பனாஜியில் இன்று தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**